ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் *நியமங்களுக்கு* இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க மாநகர சபை செயற்பட்டுள்ளதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.2 ஆம் பந்தியில் (கீ), (கீ), (கு) மற்றும் (கூ), அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கைகளில் பாதீட்டு தகவல்கள் நிதி கூற்றுகளில் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பாதீட்டு தகவல்களை நிதிக் கூற்றுகளில் முன் வைப்பதாக	நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்
(ஆ)	நியமத்தின் 3 அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் படி காசு பாய்ச்சல் கூற்றின் கீழ் முதலீட்டு செயற்பாடுகளில் கிடைத்த பண அளவை கணக்கீடு செய்த போது முதலீடாக ரூபா.50,245,565 சீராக்கப்பட வேண்டி இருந்த போதிலும் ரூபா.41,126,851 ஆக சீராக்கம் செய்யப்பட்டு இருந்ததுடன், காசாகக் கிடைத்திருந்த ரூபா.6,620,945 இற்கான முதலீட்டு வட்டி ரூபா.17,902,022 எனக் காட்டப்பட்டிருந்தது.	சரியாக மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

(இ)	நியமத்தின் 3 அத்தியாயத்தில் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றில் கீழ் செயற்பாடுகளினால் வரும் தேறிய காசுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது சீராக்கலாக ரூபா.10,668,078 சேர்க்கப்பட்டிருந்தது. ஆயினும், அப்பெறுமானம் உருவாகிய விதம் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	நியமத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நியமத்தின் 3 அத்தியாயத்தில் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றின் நிதியளித்தல் செயற்பாடுகளினால் வரும் தேறிய காசுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது பெறப்பட்ட மூலதனச் செலவின மானியமாக ரூபா.114,512,019 ஆக சீராக்கம் செய்ய வேண்டிய போதிலும் ரூபா.47,348,231 தொகை சீராக்கப்பட்டிருந்தது.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	நியமத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	நியமத்தின் 6 அத்தியாயம் 6.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 வருடத்தில் டிசம்பர் 31 அன்று வேலை நிறைவடையாது இருந்த ஒப்பந்தங்களின் பெறுமதி நடைபெற்றுக் கொண்டு இருக்கும் வேலைகளின் பெறுமதியாகக் கணக்கிடப்பட வேண்டும் எனினும் அந்தச் செயற்றிட்டங்களின் பெறுமதி ரூபா.64,211,217 கட்டடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்புப் பதிவு மூலம் திருத்தப்படுவதாக	நியமத்தின் அடிப்படைடயில் நடைமுறை வேலை மற்றும் மூலதனமாக்கப்பட வேண்டிய வேலை தனித்தனியே இனங்காணப்பட வேண்டும்.
(ஏ)	நியமத்தின் 9 அத்தியாயம் 9.5 ஆம் பந்தியின் பிரகாரம். செலவுகளை மேற்கொள்வதற்காக அரசின் பணிப்பொறுப்பு போன்ற செலவினங்களை இனங்காணப்படும் காலப்பகுதியல் வருமானமாக இனங்காணப்படும் போது பெறுமானத்தேய்வு செலவினத்தை இனங்காண்பதற்கு குறைந்து செல்லும் மீதி முறைமையை பயன்படுத்த வேண்டிய போதிலும், ஆனால் நேர்கோட்டு முறை பயன் படுத்தப்பட்டிருந்தது.	திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நியமத்தின் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்ழைக எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முன்னைய ஆண்டுகளுக்கு உரிய கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் ரூபா.11,059,301 ஆண்டின் வட்டி வருமானத்துடன் இணக்கம் செய்யப்பட்டிருந்தமையினால் ஆண்டின் வருமானம் அப்பெருமானத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக	ஆண்டுக்குரிய வருமானத்தை சரியாக அடையாளம் காண வேண்டும்.
(ஆ)	நிலையான வைப்புக்களுக்காகக் கிடைக்க வேண்டியவ ட்டி வருமானம் ரூபா.624,700 கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், கிடைக்க வேண்டிய வட்டி ரூபா.19,269 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக	கிடைக்க வேண்டிய வருமானத்தை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நிலையான சொத்துக்களிற்குரிய தேய்மானம் கணக்கீடு செய்யப்படும் போது ரூபா.3,490,790 குறைவாகவும் ரூபா.5,543,046 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக	தேய்மானம் சரியாகக் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	விழா மண்டப வாடகை வருமானப் பட்டியலின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாமையினால் ஆண்டின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய மீதி ரூபா.700,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	விளம்பரப் பதாகை வருமானம் ரூபா.87,875 இனால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா.25,862,717 பிடியாணை மற்றும் மிகை அறவீட்டுக் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	வருமானம் சரியான வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	மீண்டுவரும் செலவினம் தொடர்பாக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றீடு ரூபா.146,670 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	வீதி அபிவிருத்திக்கான செலவினம் ரூபா.17,592,831 கட்டடத்தின் கீழும் கணணி கொள்வனவு ரூபா.1,245,527 இயந்திரத்தின் கீழும் காட்டப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	சரியான சொத்து கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும

(ஐ)	ஒபேசேகரபுரவில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா.2,329,150 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	மூலதன மற்றும் மீண்டும் செலவினங்கள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஒ)	ஒபேசேகரபுற சங்க மண்டப கட்டிட திருத்திற்காக கடன் கொடுத்தோராக ரூபா.999,136 கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	மிகை ஒதுக்கீட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஓ)	ஆண்டில் செய்யப்பட்ட றிர்மாணங்களின் வரி ரூபா.76,500 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக	கணக்கீடு செய்து சீராக்கம் செய்யப்பட வேண்டும்.
(ஔ)	கடன் கொடுத்தோர் மீதிகள் மூன்று முறை பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் கடன் கொடுத்தோர் ரூபா.36,916,266 ஆலும் செலவினங்கள் ரூபா.324,000 கூடுதலாகவும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா.36,592,266 ஆலும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	சரியான கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	தீயணைப்பு பிரிவின் பாதுகாப்பு உடைகள் உபகரண தொகுதிகள் கொள்வனவுவிற்காக செலவிடப்பட்ட ரூபா.1,121,000 தொகை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	சரியான சொத்து கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(கா)	2024 ஆம் ஆண்டில் ரூபா.306,800 பெறுமதியான நீர் தாங்கி விநியோகிக்கப்பட்டிருந்த போதும் இருப்புப் பெறுவதில் அகற்றப்படாமை காரணமாக ஆண்டின் இறுதி மீதி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்து இருப்பு பெறுமதி நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும்.
(கி)	2023 ஆம் ஆண்டின் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் மீளாய்வாண்டில் சீராக்கம் செய்யும் போது இருப்பு கணக்கு ரூபா.605,400 தொகை கூடுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக.	தவறுகளை சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கீ)	2023 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட ஜனஜய மீச்சந்தை வர்த்தக தொகுதியில் நிர்மாணம் தொடர்பாக கொடுப்பனவு செய்யப்படாத ரூபா.35,738,704 ஆன பட்டியல் மீதிக்குரிய செலுத்தப்பட்டின ரூபா.31,120,027 ஆன தாமத வட்டி கணக்கீடு செய்ததை சீராக்கும் போது கட்டிட கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.	சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	தவறுகளை சீராக்குதல் சரியாக திருத்தம் செய்யப்பட வேண்டும்.

(கு)	2023 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட பெறவேண்டிய வீத வரி மீதி ரூபா.466,539 இற்குரிய சீராக்கங்கள் மீளாய்வாண்லும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக	தவறுகளை திருத்தம் செய்யும் போது சரியாக செய்யப்பட வேண்டும்.
(கூ)	முன்னைய போது நிதிக் கூற்றுக்களைத் ரூபா.6,481,525 ஆன கடன் கொடுத்தோர், நானாவித கடன் கொடுத்தோர் மற்றும் களஞ்சிய கடன் கொடுத்தோர் கணக்கு இரண்டிலும் கணக்கீடு செய்தமை நடப்பாண்டிலும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை	நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதாக	தவறுகளை திருத்தம் செய்யும் போது சரியாக செய்யப்பட வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுகளில் காணப்படும் 15 கணக்கு விடயங்களுக்கரிய மீதிகள் அவற்றிற்குரிய பயன்பாட்டு ஆவணங்களில் காணப்படும் மிதிகளுக்கு இடையே ஒப்பிடும் போது ரூபா.47,213,952 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.	2025 ஆகஸ்ட் 31 இற்கு முன்னர் அனைத்து கணக்கு களையும் சீராக்கம் செய்வதாக.	வேறுபாடுகளை இனங்கண்டு திருத்தம் செய்ய நடவடிக்கை எடுதத்ல் வேண்டும். .

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்களுக்குரிய ரூ.2,175,351 பெறுமதி கணக்கிடப்பட்ட விதம் குறித்து போதுமான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.	மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் கணக்கிடப்பட்ட விதம் இணைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளதாக.	பெறுமதி கணக்கி டப்பட்ட விதம் குறித்த முறை சமர்ப்பிக்கப்பட வில்லை.

1.7 <u>இணக்கமின்மைகள்</u>

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 1645	சபையின் சாரதிகள் நாளாந்த ஓட்டக் குறிப்பு பதிவேடுகளை முறையாக வைத்திருக்காததால், வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு தொடர்பாக ஒரு சிக்கல் நிறைந்த சூழ்நிலை எழுந்தது.	சாரதிகளுக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் GPS பரிசோதனைகள் மூலம் எரிபொருள் பற்றிய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுவதாக.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி	ஓட்டக் குறிப்புக்களில் ஓட்டத்திற்காக வாகனம் புறப்படும் மற்றும் வரும் நேரங்கள், ஊடப்பட்ட அளவு மற்றும் வாகனத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தரின் சிற்றொப்பம் ஆகியவை ஒருபோதும் பதிவு செய்யப்படவில்லை.	அனைத்து சாரதிகளுக்கும் ஓட்டக் குறிப்புக்கள் சரியாக நிரப்பப ்பட்டால் மாத்திரமே எரிபொருள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். .
(இ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசு நிதி சுற்றறிக்கை மற்றும் நி.பி 371 (5)	சபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா.851,300 ஆன முற்பணம் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	எதிர்காலத்தில் இவ்வாறான தாமதமான்று மேற்கொள்ளாமல் இருப்பதாக.	சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2016 ஏப்ரல் 28 ஆந் திகதிய LGD/04/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற திணைக்களச் சுற்றறிக்கை	ரூபா.190,000,000 பெறுமதியான நிலையான வைப்புக்களை விடுவிக்கும் போது சுற்றறிக்கை பிரகாரம் மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கைக்கு முரணான செயற்பாடொன்று அல்ல என்பதாக.	சுற்றறிக்கை பிரகாரம் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.
(உ)	பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ) பந்தி	தீ பாதுகாப்பு உடைகள் வாங்குவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடய அறிவு கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் இல்லாததால், தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தின் நிலையப் பொறுப்பாளரால் பரீட்சித்த பின்னர் ரூபா.1,121,000 பெறுமதியான தீ பாதுகாப்பு உடைத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டன.	ஆரம்ப விலை மற்றும் நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தப்படுகிறதாக..	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ) பெறுகை வழிகாட்டல் கோவையின்

(i) 1.2.1 பந்தி	நிராகரிக்கப்பட்ட நிறுவனம் தீ பாதுகாப்பு உடைகளை கொள்வனவு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தை விட அனைத்துத் தேவைகளிலும் முன்னணியில் இருந்தது, மேலும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்கியதால் சபை ரூ.630,000 கூடுதலாக செலுத்த வேண்டியிருந்தது.	பாதுகாப்பு நிறைவேற்றப்படும் வகையில் செயற்பாடு தொடர்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) 7.7.1 பந்தி	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, குறைந்த விலையைத் தேர்ந்தெடுக்காததற்கான காரணத்தைக் கூறாமல் அதிக விலையைப் பரிந்துரைத்ததால், இரும்புப் பொருட்களை வாங்குவதற்கு கூடுதலாக ரூபா.1,137,476 செலுத்த வேண்டியிருந்தது.	மதிப்பீட்டுக் குழுவால் குறைந்த விலை, தரம் மற்றும் வியாபாரக் குறியை கருத்தில் கொண்டு, சபைக்கு மிகவும் பொருத்தமான வழங்குனர் களைத் தெரிவு செய்ததாக.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.308,552,531 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.210,290,184 ஆக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்பட்ட கொடுப்பனவு ரூபா.2,088,267 மற்றும் இனங்காணப்பட்ட பெறுவனவு ரூபா.7,544,411 இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு இணக்கம் செய்யப்படவில்லை.	இந்தக் கொடுப்பனவை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாத காலத்திற்கு மேற்பட்டதாக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா.667,012 மற்றும் தீர்வையாகாத ரூபா.2,591,389 என்பன கணக்குகளில் இணக்கம் செய்யப்படவில்லை.	சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மாநகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்ப ட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்ப ட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா. 000	ரூபா. 000	ரூபா. 000	ரூபா. 000	ரூபா. 000	ரூபா. 000	ரூபா. 000	ரூபா. 000
(i)	வீதவரியும் வரியும்	298,500	294,287	276,448	214,812	283,200	268,546	279,125	197,088
(ii)	வாடகை	92,177	142,253	83,658	115,323	100,073	72,890	72,339	45,619
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	60,477	54,252	54,916	-	38,476	42,215	42,215	-
(iv)	ஏனைய வருமானம்	233,410	143,853	172,196	2,041	1,344,534	629,122	632,330	4,192
	மொத்தம்	684,564	634,645	587,218	332,176	1,766,283	1,012,773	1,026,009	246,899

2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வீத வரியும் வரியும்		
(i)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி மீதி ரூபா.183,820,792 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 10 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது.	வீதவரி திருத்தம் காரணமாக கட்டணங்கள் 250 சதவீதத்தால் அதிகரித்ததன் பேரில் வீதவரி நிலுவை அதிகரித்துள்ளது .	நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சபை அதிகார பிரதேசத்தில் காணப்பட்ட சினிமா கொட்டகையொன்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.2,781,679 ஆன களியாட்ட வரி மீதி 2019 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது	நிலுவை களியாட்ட வரியை பதிவழிப்பதற்காக பரிந்துரையைப் பெற்றுக் கொளவதற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும்.	நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வாடகை		.
(i)	மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த கடை வாடகை ரூபா.115,323,795 ஆக இருந்தது.	ஏதிர.வரும் ஆண்டில் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ii)	ஜன ஜய சிட்டி வியாபாரத் தொகுதியின் 276 கடைகளில் இருந்து பெறவேண்டிய மீதி ரூபா.37,362,861 ஆக இருந்தது.	எதிர்காலத்தில் போது நிலுவை கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	கடை வாடகைக்காக புதிய மதிப்பீட்டின் பிரகாரம் பட்டியலிடலின் பெறுமதி ரூபா.84,498,576 வருமான கூற்றிற்கு இனங் காணப்பட்டிருந்த போதும் பெறவேண்டிய மீதியான ரூபா.70,203,357 தொகையை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.	புதிய மதிப்பீடு இதுவரை சபைக்கு கிடைக்காத இருந்ததுடன் எதிர்பவரும் ஆண்டில் செயற்படுத்துவதற்கு உள்ளதாக.	நிலுவை மீதிகளை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நீதிமன்ற தண்ட பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்		
	மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப் பட்ட முத்திரை கட்டடங்கள் ரூபா.600,000,000 அறவிடப்பட வேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா.245,135,400 ஆக இருந்தது மேலும் மீளாய் வாண்டின் இறுதி வரையில் நீதிமன்ற தண்ட பணம் ரூபா.3,677,906 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது.	நிலுவை நீதிமன்ற தண்டபணத்தை அறவீடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	தாமதம் இன்றி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் நிர்மாண பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்குரிய பிரதான நகர பொறியியலாளர் மற்றும் நகர பொறியிலாளரால் முற்பணமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா.770,370 ஐ தீர்வு செய்யும் போது தனிப்பட்ட ரீதியில் செயலாளரால் செய்யப்பட்ட ரூபா.352,940 தொகையை மீளளிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல்களுக்கிடையே முறையே ரூபா.554,520 க்கும் ரூபா.53,575 இற்கும் உரிய பட்டியல்கள் போலியான பட்டியலாக வெளிப்படுத்தப்பட்டது.	குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் ஆரம்ப பரிசோதனை பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக.	புலனாய்வு நடத்தப்பட்டு ஒழுங்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தீயணைப்பு சேவை பிரிவிற்காக தள்ளி திறக்கூடிய திறக்கும் வாயிற்கதவுடன் எல்லை சுவர் மற்றும் இரும்பு வேலி நிர்மாண செயற்திட்டத்தில் செய்யப்பட்ட வேலை பெறுமதி அடிப்படையில் ஒப்பந்தக்காரருக்கு இணங்கிய பெறுமதி ரூபா.3,891,750 தொகை முதல் ரூபா.4,199,437 வரை அதிகரித்திருந்த போதும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.3 வழிகாட்டலின் பிரகாரம் விலகல் கட்டளை தயாரிக்கப்பட்டு மாநகர ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு 2.8.4 வழிகாட்டியின் பிரகாரமான குழுவொன்றாக இல்லாமல் இருந்ததுடன் 2.7.5 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை குழுவொன்று நியமிக்கப் பட்டிருக்கவில்லை. தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் இரண்டாவது குறைந்த விலையுடன் கூடிய கேள்வி பரிந்துரைந்திரந்தட போதும் குறைந்த விலையை நிராகரித்தமைக்க நியாயமான காரணங்கள் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.	நிச்சயமற்ற செலவின எல்லைக்குள் காணப்படுவதால் மதிப்பீடு திருத்தம் செய்வதற்கு தேவைப்படவில்லை என்பதாக.	பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .
(ஆ)	அரச மானியங்களின் கீழ் 2017, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய செயற்திட்டங்களுக்காக தொடர்ந்தும் இருந்து வருகின்ற பெறவேண்டிய ரூபா.23,287,498 ஆன மீதி ஒன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சரியான மீதியை இனம் கண்டு நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்வதாக	நிலுவை வீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபைக்கு சபைக்கு நீண்ட காலமாக கிடைக்க வேண்டிய ரூபா.290,919,869 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முன்னர்கு முன்னர் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	தாமதம் என்று நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	பின்வரும் விடயங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
	(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா.75,270,927 ஆன மீதி ஆண்டின் இறுதியின் போது ரூபா.39,997,137 வரை குறைவடைந்த விதம்.	வெட் கணக்கில் உள்ள வேறுபாடு 2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு முன்னர் அதற்குரிய கணக்குகள் திருத்தம் செய்வதாக்	பெறுமதி உருவாகிய விதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

(ii) ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் கொள்வனவின் கீழ் 2024 ஆம் ஆண்டில் கையேற்கப்பட்டிருந்த ரூபா.223,679,512 ஆல் ரூபா.120,328,061 ஆன நிலையான சொத்துக்கள் கையேற்கப்ப்பட்ட விதம்.	சமர்ப்பிக்கப்படாத ரூபா.120,328,061 பெறுமதியான தொகை தொடர்பான தகவல்களை 2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு முன்னர் இனங்காணப்பட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக.	பெறுமதி உருவாகிய விதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
(iii) நிதிக் கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட்டிருந்த ரூபா.185,765,056 ஆன இருப்பு மீதியில் ரூபா.141,576,136 இற்குரிய இருப்பு மெய்மையாய்வு ஆவணங்கள்.	இவ்வேறுபாட்டுக்கு காரணங்கள் இருந்தாலும் அக்குறைபாடுகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	வேறுபாட்டுக்கான காரணங்கள் இனம் காணப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

3.3 விளைவற்ற குறை பயன்பாடு உடைய சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஜனஜய சிட்டி வியாபாரத் தொகுதியின் முன்னாள் வாகன நிறுத்துமிடம், நகர சபைக்கு முன்னால் வாகன நிறுத்துமிடம் மற்றும் ராஜகிரிய காட்ன்ஸ்,புத்கமுவ வீதி, செப்பல் வீதி ஆகிய வாகன நிறுத்திமிடங்கள் போன்ற வருமானத்தை சேகரிக்க கூடிய இடங்களாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை	அனைத்து வாகன நிறுத்தமிடங்களுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் கேள்வி கோரப்பட்டதும் எந்தவொரு விண்ணப்பதாரர்களும் முன்வராதராக எதிர்காலத்தில் மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும்.	பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையால் பயன்படுத்தப்படுகின்ற உரித்து கையேற்கப்படாத 13 காணிகளை சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கவில்லை	காணிகளின் உரித்தினை விரைவாக கையேற்றல் வேண்டும். .

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
குறைந்த விலை மற்றும் போதிய அளவு உத்தரவாக காலம் ஒன்று வழங்கியிருந்த நிறுவனங்கள் இருக்கையில் அந்நிறுவனங்களில் கொள்வனவு செய்யாமல் வேறு	தரத்தை பரிசோதிக்காமல் மின் குமிழ்கள் கொள்வனவு செய்ததன் அடிப்படையில் தரம் குறைவடைந்தமை காரணமாக சபைக்கு	குறைந்த கிரயகத்தின் கீழ் தரமான பொருட்களை கொள்வனவு

இரண்டு நிறுவனங்களிடம் பொருட்கள் கொள்வனவு செய்தமையால் சபைக்கு ரூபா.3,824,424 ஆன நட்டமொன்று ஏற்பட்டு இருந்தது.	மேலதிக செலவொன்றினை மேற்கொள்ள நேரவதாகவும் குறைந்த விலை விபரங்களின் கீழ் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பங்களின் போது கிடைக்கும் உருப்படிகள் மிகவும் குறைந்ததாக காணக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாக.	செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையில் 175 வெற்றிடங்கள் காணப்பட்டன.	இந்த அனைத்து வெற்றிடங்கள் தொடர்பாகவும் மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக	அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிரந்தர சம்பளம் தரும் 36 சாரதிகள் இருந்த போதும் அதில் 13 பேர் சேவைக்கு அறிக்கையிட்டு சபை வளவில் இல்லாத இருந்ததாக 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனை போது உறுதிப்படுத்தப்பட்டது நிரந்தர சாரதிகள் அவர்களின் கடமைகளை முறையாக நிறை வேற்றாமையால் சபை உழைப்பு கொள்வனவு அடிப்படையில் இரண்டு சாரதிகளை ஆட்சேர்த்து இரண்டு பேருக்கும் 2024 மே 31ஆம் திகதி வரை ரூபா.601,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது..	13 சாதிகளால் கடமைகள் ஒன்று இல்லா கடமையொன்று இல்லாமல் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக நேர வேலை அந்த ஊழியர்களிடமிருந்து மீண்டும் அ விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	நிரந்தர சாரதிகளை கடமைகயில் ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் உழைப்பு கொள்வனவு தவிர்க்கப்பட வேண்டும்.
(இ)	ஊழியர் கடன் ரூபா.5,700,607 தொகை நீண்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது	குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழு தீர்மானத்தின் பேரில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளதாக	நிலுவை ஊழியர் கடன் தொகையை விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு மற்றும் 2019 திசெம்பர் 24 ஆம் திகதிய 2155/6 ஆம் இலக்க வர்த்தமானியன் 8 ஆம் கட்டளையின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக் கூற்றுக்கள் அடுத்த நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் நிதிக்கூற்றுகள் 118 நாட்கள் தாமரை 2025 ஜுன் 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2026 ஆம் ஆண்டின் போது பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் நிதிக் கூற்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
வருடாந்த பாதீட்டின் பிரகாரம் சபையால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் ஆண்டின் இறுதியில் செயன் முன்னேற்றத்தை காண்பிக்க செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கு பதிலாக உள்ளுராட்சி மன்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் செயல் நடவடிக்கை திட்டத்தின் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் தெளிவாக முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பாக நிர்வாக அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக.	செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு உரிய செயல் முன்னேற்றத்தை தெளிவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	272 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா.148,411,000 ஆன மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.	அரசின் நிதி ஏற்பாடு மற்றும் மாகாண சபை நிதி ஏற்பாடு கிடைக்காததன் காரணமாக சபையின் செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக.	பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும்.
(ஆ)	42 செலவின விடயங்களுக்கு ரூபா.58,916,300 தொகை மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அதில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் செலவிடப்படா திருந்ததுடன் அந்தளவு ரூபா.51,139,364 ஆக இருந்தது.	எதிர்வரும் ஆண்டுகளில் இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும்.